**இலங்கை தேயிலைச் சபை - 2019**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேயிலைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| | கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அறிக்கையிடல் நியமங்களில் இடமளிக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வருமானம் மற்றும் செலவு ஒன்றுக்கொன்று மாற்றீடு செய்ய வேண்டியதில்லை எனினும் சபையின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.211,488 பெறுமதியான சொத்துக்களின் கைத்தவிர்ப்பினால் பெற்ற இலாபத்தினை வெளிநாட்டு | மேம்பாட்டு நிதியித்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருளொன்றை விற்பனை செய்வதனால் பெறப்பட்ட இலாபமான ரூபா.211,488 விற்பனை மற்றும் விளம்பர நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினை ஒன்றுக்கொன்று பதிலீடு செய்யப்படலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்தினை நடாத்தும் செலவுக் கணக்கிற்கு பதிலீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 | | |
| i. | சபையினால் முழுமையாக தேய்மானத்திற்குட்படுத்தப்பட்ட ரூபா.81,316,077 பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மேலும் பயன்படுத்தக் கூடியதாக இருப்பினும் மேற்கூறிய நியமத்தின் பிரகாரம் அந்தச் சொத்துக்களின் பயன் தரும் ஆயட்காலத்தினை மீளவும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச அலுவலகம் மற்றும் தேயிலை ஆலோசகர் / பரீட்சிப்பாளர் அலுவலகங்கள் பலவற்றில் மீள் மதிப்பீட்டு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கான கணக்கீட்டு செம்மையாக்கல்கள் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2020 ஆம் ஆண்டில் மற்றவை அனைத்தும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு செம்மையாக்கல்களை மேற்கொள்ள குறிப்பு இடப்பட்டுள்ளது. | இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் பயன்பாட்டு ஆயட்காலம் மீளவும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| ii. | ரூபா.350,000,000 பெறுமதிக்கு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி 2008 திசெம்பர் 31 ஆம் திகதியின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி, கட்டடம் மீள்மதிப்பீடு செய்தல் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். தாமதமாக அல்லது குறித்த மதிப்பீடு 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்களைச் செய்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது. | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| iii. | நியமத்தின் 36 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படியொன்றை மீள்மதிப்பீடு செய்கையில் அந்தச் சொத்து உரித்தாகும் சொத்து, பொறி மற்றும் உபகரணப் பிரிவினை முழுமையாக மீள்மதிப்பீடு செய்ய வேண்டியதாக இருப்பினும் மீளாய்வாண்டில் சபையினால் தளபாடங்களும் | 2020 ஆம் ஆண்டில் உள்ளகக் குழு ஒன்றின் மூலம் பிரதான அலுவலகத்தின் சொத்துக்கள், ஆலை உபகரணப் பிரிவுகள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து அறிக்கைகளையும் உடனடியாகச் | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்கையில் அந்த சொத்து, பொறிகள் மற்றும் உபகரணப் உபகரணத் தொகுதி முழுமையாக மீள்மதிப்பீடு செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பொருத்துக்களும் மற்றும் அலுவலக உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்கையில் பிரதான அலுவலகத்தின் அந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பதுரலிய பிரதேச அலுவலகத்தின் இரண்டாவது கட்டடத்திற்கு சபையினால் செலவிடப்பட்ட மொத்த செலவு ரூபா.9,401,645 ஆக உள்ள போதும் அதற்குரிய நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா.13,200,000 எனக் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த நிர்மாணத்தினை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதுரலிய பிரதேச அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா.9,401,645 கிரயமான நடைமுறை வேலைக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டியதுடன், காட்டப்பட்டுள்ள மீதியான ரூபா.13,200,000 சரியானது அல்ல. அது மதிப்பிடப்பட்ட செய்யப்பட்ட செலவாகும். இந்த பிழையான குறிப்பு 2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தத்தின் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பெறுமதி நடைமுறை வேலையாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பதுரலிய பிரதேச அலுவலகத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய தொகை எதுவும் இல்லாத போதிலும் அந்த நிர்மாணத்திற்காக ரூபா.5,601,986 கட்டடத் திணைகக்ளத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினை நடைமுறை வேலைப் பெறுமதியாகக் காட்டப்பட்டதனால் தோன்றியுள்ள கடன்கொடுத்தோர் மீதியானது சரியானதல்ல. அது 2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்படும் ஒப்பந்தங்கள் மட்டுமே கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் ஒப்பந்தங்களை ஆரம்பிப்பதற்கான மொத்த முற்பணத் தொகையான | பணியாரம்பிப்பு முற்பணத் தொகையானது அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளது. | சபையினால் செலுத்தப்பட்ட பணியாரம்பிப்பு முற்பணம் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்ட பின்னர் அந்தக் கணக்கு தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.2,160,663 ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டு இருந்த போதிலும் வேலை தொடங்கும் முற்பணக் கணக்கை அதற்கமைய திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டுக்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா.199,798,378 பெற்றுக் கொள்ள வேண்டிய வட்டியாகக் குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக நிலையான வைப்பு முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் இறுதியில் கணக்குகளை தயாரிக்கையில் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிலையான வைப்பு மற்றும் பெற வேண்டிய வட்டி என்பவற்றை 2 உருப்படிகளாக சமர்ப்பிக்கக் குறித்துக் கொள்கின்றேன். | மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய வட்டி வருமானம் பெற்றுக் கொள்ள வேண்டிய வட்டியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | அடுத்த வருடத்திற்கான விநியோக அனுமதிப்பத்திர வருமானம் மற்றும் தேயிலைத் தொழிற்சாலை பதிவு செய்தலைப் புதுப்பித்தல் வருமானம் என்பவற்றில் மொத்தமான ரூபா.2,385,000 மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்து. | 2020 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகளை தயாரிக்கையில் திருத்துவதற்குக் குறித்துக் கொள்ளுகின்றேன். | அடுத்த ஆண்டிற்காக கிடைத்த வருமானம் நடைமுறைப் பொறுப்பாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | ஆய்வுகூட வருமானம் | 11,499,886 | 12,748,400 | 1,248,514 | ஆய்வுகூட பரிசோதனைகளுக்கு ரூபா 12,748,400 இற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று பிரதி தேயிலை ஆணையாளரின் (ஏற்றுமதி) பரிந்துரைக்காக | ஆய்வுகூடத்தின் வருமான அறிக்கை மற்றும் நிதிப் பரிவின் வருமான அறிக்கை என்பவற்றை ஒப்பிடக்கூடிய வகையில் அமைப்பொன்றை உருவாக்குதல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய பரிசோதனைக்காக ரூபா. 11,499,886 இற்கான விண்ணப்பங்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய பரிசோதனைக்குப் பரிந்துரைக்கப்படும் தொகைகள் மட்டுமே நிதிப் பிரிவின் மூலம் பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | ஆய்வுகூட நுகர்வுப் பொருள் | 6,450,193 | 6,784,355 | 334,162 | ஆய்வுகூட நுகர்வுப் பொருட்களின் இறுதி இருப்புக் கணக்கெடுப்பின் போது ரூபா.334,162 பெறுமதியான இருப்பு குறைவாகக் கணக்கெடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய இந்த பற்றாக்குறை தொகையானது 2020 ஆம் ஆண்டில் பேரேட்டின் மூலம் திருத்தப்படும். | பௌதிக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் மீதியானது நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் நேரொத்ததாக இருத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா.25,000,000 இற்குப் பதிலாக, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள ''சிலோன் டீ மியூசியத்தின்'' உரிமத்தினைக் கைப்பற்றி அந்த மீதியைப் பதிவழிக்க மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் தேயிலைச் சபை 2012 ஜூன் | ஜனவசமவிற்கு பெற்றுக் கொடுத்திருந்த ரூபா. 25 மில்லியன் தொகைக்குப் பதிலாக ''சிலோன் டீ மியூசியத்தின்'' கட்டடத்தினை நடாத்திச் செல்லும் காணியினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் கடன் மீதியை பதிவழித்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தேயிலை சபையினால் குறித்த | இரு தரப்பினரும் உடன்பட்டதன் பிரகாரம் கடன் தொகையை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 19 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவின் கட்டளைக்கமைய தீர்மானத்திற்கு உடன்பட்டிருப்பினும் 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் இந்த செயற்பாடு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணியினைப் பயன்படுத்துவதற்கு குறித்த குத்தகை பணம் மற்றும் இலங்கை தேயிலைச் சபையினால் ஜனவசமவிற்கு பெற்றுக் கொடுத்துள்ள ரூபா. 25 மில்லியன் கடன் தொகைக்கு பெயரளவு வட்டியைக் கணக்கிட்டு மீதியைப் பதிவழித்தல் மற்றும் சொத்துக்களை கையகப்படுத்துவதற்குரிய மீதி செம்மையாக்கல் பணிப்பாளர் குழு அனுமதியின் கீழ் உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ஆ) | முன்னாள் அமைச்சர், அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் உள்ளிட்ட குழுவின் மொத்த வெளிநாட்டுப் பயணச் செலவினம் ரூபா.975,255 இனை 2 வருட காலமாக பெற வேண்டிய மீதியாகக் குறிப்பிட்டிருப்பினும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது பதவியணியினர் வெளிநாட்டுப் பயணத்திற்காக செலவிட்ட தொகையாகும். அந்த தொகையினை இலங்கைத் தேயிலை சபைக்கு அனுப்புமாறு தெரிவித்துக் கடிதம் மூலம் அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் முன்னேற்றம் இது வரையிலும் காணப்படவில்லை. எவ்வாறாயினும் உடனடியாக இந்தத் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | வெளிநாட்டுப் பணத்திற்காக வெளித் தரப்பினருக்காக செலவிடப்பட்ட இந்தத் தொகையினை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டில் உலகளாவிய தேயிலை உபசரிப்பிற்காக வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.51,604,457 பணத்தில் 15 நாடுகளில் மீதமாகியுள்ள ரூபா.1,078,054 பணத்தினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திரும்பவும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உலகளாவிய தேயிலை உபசரிப்பிற்காக வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தில் மிகுதிப் பணத்தினைப் பரீட்சித்து உரிய ஆவணங்களை வெளிநாடுகள் சம்மந்தமான அமைச்சின் பிரதான கணக்காளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் அதன் மூலம் அந்த அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தினை உடனடியாக இலங்கைத் தேயிலைச் சபைக்கு விடுவிப்பதாகத் தெரிவிப்பதுடன் இது தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கின்றேன். | விசேட செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட பணத்தில் மிகுதிப் பணத்தைச் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடனேயே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 01 வருடம் தொடக்கம் 16 வருடங்கள் வரையான காலமாக தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களினால் பச்சைத் தேயிலை வழங்குனர்களுக்கு செலுத்துவதற்குச் சபையில் வைப்பிலிடப்பட்டுள்ள ரூபா.3,204,264 இனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம் கிடைக்க வேண்டிய தரப்பினர் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அவர்களின் விலைப்பட்டியல் மற்றும் கொழுந்து வழங்குனர்களின் ஆவணங்களைப் பரீட்சித்து விடயங்கள் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்தக் கொழுந்து பணத்தினைத் தொழிற்சாலை அமைந்துள்ள பிரதேச அலுவலகம் ஊடாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அந்தக் கணக்கிற்கு புதிதாக பணம் சேருவதும் இருக்கும் பணம் செலுத்துவதும் இடம்பெறும். ஒரு சில சந்தர்ப்பங்களில் பணம் கிடைக்க வேண்டியவர்களைச் சரியாக அறிந்து கொள்ள முடியாமை மற்றும் பல்வேறு தரப்பினர் அவ்வப்போது சமர்ப்பிக்கும் கடிதங்களைக் கொண்டு உருவாகும் பரீட்சித்தல் சிக்கல்கள் காரணமாக அறவிடப்பட்ட பணத்தினைச் செலுத்தி நிறைவு செய்தல் அவ்வப்போது தாமதமாகியுள்ளது. அதற்கமைய சரியான விண்ணப்பதாரிகளை அறிந்து கொள்ளத் தவறும் சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட பணம் வைப்பாளர்களுக்கு மீளவும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீர்வொன்றைப் பெற முடியாத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கிடைக்கும் ஆலோசனைக்கு அமைய செயற்படுத்துவதற்கும் செலுத்தக்கூடிய பணத்தினை உடனடியாகச் செலுத்தி நிறைவு செய்வதற்கும் இந்த | செலுத்த வேண்டிய தரப்பினரைச் சரியாக அறிந்து கொண்டு உடனடியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருடத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | |
| (ஆ) | வேலை பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் நிறுத்தி வைக்கப்பட்ட தொகையான ரூபா.906,611 இரண்டு வருடங்கள் கடந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்களினால் 2017 ஆம் ஆண்டு வரையிலும் இருந்த பிடிகாசு இதுவரையிலும் விண்ணப்பிக்காத காரணத்தினால் 2020 ஆம் ஆண்டில் வருமானத்தில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினரை அறிந்து கொண்டு தீர்த்து வைப்பதற்கு அல்லது உரிமை கோரப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப் படுமாயின் வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கைத் தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செஸ் வரி தேயிலை நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டி இருப்பினும் அதற்கு முரணாகப் பொதுத் திறைசேரியில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில் தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய தேயிலைச் சபையினால் செஸ்வரி அறவிடுதல் இடம்பெற்றிருந்த போதிலும், பின்னர் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் மூலம் செஸ்வரி அறவிடுதல் பொதுத் திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவசியமான ஆலோசனைகள் சட்டமா | சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் அதிகாரச் சட்டத்தில் திருத்தம் செய்து, செஸ்வரி தொடர்பில் காணப்படும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது வரையிலும் சட்ட ஆலோசனைகள் கிடைக்கப்பெறவில்லை. | |
| (ஆ) | 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவு | பதிவு செய்யப்பட்ட கழிவுத் தேயிலை விற்பனையாளர்களுக்கு மட்டும் கழிவுத் தேயிலை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டிற்கு பதிவினைப் புதுப்பிக்காத காலி பிரதேச அலுவலகத்திற்குட்பட்ட 05 தயாரிப்பு மத்திய நிலையங்களுக்கு கழிவுத் தேயிலைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | இலங்கை தேயிலைச் சபையின் பொதுவான நடைமுறையானது முந்தைய வருடத்தின் பதிவுடன் மத்திய நிலைய பதிவினைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்ததன் பின்னர் அந்த விண்ணப்பத்தைப் பரீட்சித்துப் பதிவினைப் புதுப்பிக்கும் வரையிலும் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதுடன் விண்ணப்பப்படிவம் பரீட்சிப்பின் பொது காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் செய்யப்படும் ஆலோசனைகள் பகுப்பாய்வு மற்றும் விசாரணையின் பிரகாரம் மத்திய நிலையத்தின் பதிவினை இற்றைப்படுத்தல் அல்லது இடைநிறுத்தல் தீர்மானிக்கப்படும். | 1957 இன் 51ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| | 24(2)(ஈ) பிரிவு | (i) கழிவுத் தேயிலையில் வேறுபடுத்தப்பட்ட பாவனைக்கு உகந்த தேயிலை விற்பனை செய்தல் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட நம்பத் தகுந்த ஆவணங்கள் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆயினும் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட இடஞ்சார் பரீட்சிப்பிற்கு விற்பனை தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததுடன் இது தொடர்பாக தேயிலை சபை கவனம் எடுத்திருக்கவில்லை. | நிராகரிக்கப்பட்ட தேயிலை தயார்படுத்தும் மத்திய நிலையத்திற்குப் பெற்றுக் கொள்ளப்படும் நிராகரிக்கப்பட்ட தேயிலை புதுப்பிக்கப்பட்ட தேயிலை புதுப்பிக்கப்பட்டு பெறப்படும் கறுப்பு தேயிலை கொழும்பு தேயிலை ஏலத்திற்குக் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதற்கான மூலப்பிரமாணங்கள் இல்லை. இது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 24(2)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனை செய்தல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | (ii) கழிவுத் தேயிலை தயார்படுத்துவோரால் | நிராகரிக்கப்பட்ட தேயிலை அனுமதிப் பத்திரத்தின் | 1957 இன் 51 ஆம் இலக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் கடந்து ஒரு மாதத்திற்கு முன்னர் பாவனைக்கு உகந்த தேயிலையை கழிவுத் தேயிலையிலிருந்து வேறுபடுத்தலை நிறைவு செய்ய வேண்டும் எனினும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நிராகரிக்கப்பட்ட தேயிலையிலிருந்து கறுப்ப தேயிலையை வேறுபடுத்தி எஞ்சியிருக்கும் குப்பைதூள் தேயிலையை மீண்டும் பயன்படுத்த முடியாத வகையில் மாற்றுதல், உரமாக மாற்றுதல் இடம்பெறுவதுடன் உரிய குறிப்புகள் ஏடுகளில் குறிக்கப்பட்டு பிரதேச அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். அதற்கமைய 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதி 182,129 கிலோகிராம் அளவானவை இயல்பு நிலை மாற்றப்பட்டிருந்தது. | தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 24(2)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுத் தேயிலையிலிருந்து பாவனைக்கு உகந்த தேயிலையை பிரித்தல் குறித்த காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்படுதல் தொடர்பில் தேயிலை பரீட்சிப்பாளர்களினால் பரீட்சிக்கப்படதல் வேண்டும். |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி சபையினால் ரூபா.7,780,196,625 நிலையான மற்றும் குறுகிய கால வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை தேயிலைச் சபையின் மூலம் சேகரிக்கப்படும் இறக்குமதி வரித் தொகையானது எப்போதும் தேயிலைச் சபைக்கு அனுகூலமான வகையில் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்படுவதனால் ஒவ்வொரு முதலீட்டுக்காகவும் நிதி அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வது நடமுறையில் சாத்தியப்படாது என்பதனால் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதனைக் குறிப்பிடுகின்றேன். | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அமைச்சரினதும் மற்றும் நிதி அமைச்சரினதும் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2018 செப்டெம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் பணிப்புரை | சபையின் எதிர்பார்க்கப்பட்ட விபரக் குறிப்புகளுக்கு இணக்கமின்றி இருந்ததன் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத 2009 ஆம் ஆண்டில் ரூபா.32,132,088 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட கிருமிநாசினி இரசாயனக் கூறு | குறித்த இயந்திரக் கொள்வனவின் போது சபையின் உத்தியோகத்தரினால் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணை நடாத்தி அறிக்கையிடும் நோக்கில் 2018 ஏப்பிரல் 23 ஆம் திகதி அடிப்படை விசாரணை உத்தியோகத்தர் ஒருவரை நியமித்ததுடன் அவர் | குறித்த விசாரணையைத் தாமதமின்றிமேற்கொண்டு பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். இவ்வாறான குறைபாடுகள் திரும்பவும் எற்படாத வகையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுப்பாய்வு இயந்திரம் அறிக்கையாகும் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் பொறுப்பு கூறவேண்டியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை. | விசாரணை நடவடிக்கைகளிலிருந்து 2019 மே 23 ஆம் திகதி இராஜினாமா செய்திருந்தார். அதன் பின்னர் 2019 செப்டெம்பர் 20 ஆம் திகதி புதிய விசாரணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு தற்போது அடிப்படை விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தல். |
| (உ) | 2003 ஜுன் 02 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | சபையினால் மனித வள முகாமைத்துவத்திற்கு சட்ட திட்டங்களை வழங்குவதற்கு உரிய செயல் ஒழுங்கு முறை கையேட்டினைத் தயாரித்து திறைசேரிச் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனினும் மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் கையேடு தயாரிக்கப்பட்டிருக்கவில் லை. | இலங்கைத் தேயிலைச் சபையின் மனித வள முகாமைத்துவத்திற்கு உரிய சட்ட திட்டங்கள் வழங்குவதற்கு உரிய செயல் ஒழுங்கு முறை கையேட்டின் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் பணிப்பாளர் குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயல் ஒழுங்குமுறை கையேட்டினை உடனடியாகத் தயாரித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா.4,229,253 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா.43,977,748 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா.39,748,495 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அபிவிருத்தி செலவுகள் 26.66 சதவீதத்தாலும் மற்றும் நிர்வாக செலவுகள் 10.95 சதவீதத்தாலும் அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நடைமுறை விகிதம் முறையே 1:14 மற்றும் 1:8 என்ற உயர்ந்த பெறுமதியைக் கொண்டுள்ளது. விற்பனை மற்றும் மேம்படுத்தல் நிதியின் குறுங்கால முதலீடு மற்றும் நிலையான வைப்புக்கள் மொத்த நடைமுறைச் சொத்துக்களில் 77 சதவீதத்தினை பிரதிநிதிப்படுத்தியமை அதில் தாக்கம் புரிந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடைமுறைப் பொறுப்புகள் 39 சதவீதத்தினால் குறைவடைதல் மீளாய்வாண்டில் நடைமுறை சதவீதம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதற்குக் காரணமாக உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 எப்பிரல் மாதத்தில் நுவரெலியா நகரத்தில் செயற்படுத்தப்படும் "நுவரெலியா வசந்த கால எழுச்சி" விழாக் காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் கவனத்தை கவரும் வகையில் "Ceylon Tea" பெயரைப் பிரபல்யப்படுத்துவதற்காக சங்கீதக் காட்சியினை நடாத்துதல் மற்றும் ஏப்பிரல் மாதத்தில் நகரத்தினை ஒளிமயமாக்கல் செயற்பாட்டிற்கு ரூபா.11,101,750 செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறான செலவுகளைச் செய்வதன் மூலம் தேயிலைத் தொழிலுக்கு கிடைக்கும் நேரடி அனுகூலங்களை அறிந்து கொள்ள முடியாததுடன் பணத்தினைச் செலவிடுகையில் பொருளாதார ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2019 மார்ச் 13 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் திருப்பதியின்மை தெரிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளில் பெரும்பான்மையானோர் ஏப்பிரல் மாதத்தில் நுவரெலியா மற்றும் கண்டி நகரங்களில் சுற்றுலா மேற்கொள்ளுவர். 2018 ஆம் ஆண்டில் ஏப்பிரல் மாதத்தில் சுற்றுலாப் பயணிகள் 233,000 பேரும் மார்ச் மாதத்தில் சுற்றுலாப் பயணிகள் 180,000 பேரும் வருகை தந்துள்ளனர். அதற்கமைய எங்களால் மதிப்பிடப்பட்டிருந்தது 2019 ஆம் ஆண்டிலும் அவ்வாறே சுற்றுலா பயணிகளின் வருகை இடம்பெறும் என்று. 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் 244,000 பேரும் மற்றும் ஏப்பிரல் மாதத்தில் வெளிநாடுச் சுற்றுலா பயணிகள் 167,000 பேரும் இலங்கைக்கு வருகை தந்திருந்ததுடன் அதில் பெரும்பாலானோர் நுவரெலியா நகரிற்கும் வருகை தந்துள்ளனர். நுவரெலியா வசந்த கால உற்சவம் மூலம் கிடைக்கப்பெற்ற அனுகூலங்கள் ஒரு வருடத்தினுள் கணக்கிடுவதற்கு முடியாததுடன் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் பாரிய அளவில் வருகை தந்த காரணத்தால் செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வெற்றியை விசேடமாகக் குறிப்பிடுகின்றேன். | மேம்பாட்டுச் செலவுகளை மேற்கொள்ளுகையில் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய மேம்பாட்டு வழிவகைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.2 இணங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா வசந்த கால உற்சவ காலத்தில் இடம்பெற்ற சங்கீதக் காட்சி மேடையினை அமைக்கும் ஒப்பந்தமானது ரூபா.5,250,000 பெறுமதியான மூன்றாவது குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. ரூபா.4,180,000 ஆன முதலாவது குறைந்த விலை சமரிப்பித்திருந்த ஒப்பந்தகாரர் ஏனைய தகமைகளை பூர்த்தி செய்திருந்த போதிலும் விலை கோரல் தொகை 60 நாட்கள் செல்லுபடியாகும் காலப் பகுதியினுள் கிடைக்கப்பெறவில்லை என்பதனைக் குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க இந்தச் செயற்பாட்டினை வழங்குதல் மற்றும் செயற்பாட்டினை நிறைவு செய்தலுக்கான கால இடைவெளி 10 தினங்கள் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டதுடன் ஒப்பந்தத்ததை பெற்றுக் கொண்ட ஒப்பந்தகாரரும் அந்தத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்திருக்காமையால் சபைக்கு ரூபா.1,070,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தத்துக்கு குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளர் அரச துறையின் வேறு நிறுவனத்தினமொன்றினால் எற்பாடு செய்யப்பட்ட இவ்வாறான விசேட வேலைத் திட்டத்தில் பங்குபற்றியிருக்காததாலும் இலங்கைத் தேயிலைச் சபையினால் நுவரெலியா வசந்த காலத்தில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட விளம்பர வேலைத்திட்டத்திற்குத் தேவையான உபகரணங்கள் விலை கோரியவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனுவின் கீழ் வழங்குவதற்கு உள்ள ஆற்றல்கள் தொடர்பில் நிச்சயத் தன்மை காணப்படாததால் இறுதித் தருணத்தில் அந்த நிலைமையின் அடிப்படையில் விளம்பர வேலைத் திட்டத்தின் தரத் தன்மைக்கு இதனால் பாதிப்பு எற்படக் கூடும் என்பதனைக் கருத்திற் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மிகக் குறைந்த காலத்தில் அதாவது 2 வாரத்தில் இந்த நடவடிக்கையை நிறைவு செய்வதற்கு அவர்களுக்கு உள்ள ஆற்றல் குறைவு என்பதை உணரமுடிந்ததால் அந்த விலைக்கோரலை நிராகரிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலக்காகக் கொண்டு சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் குறைந்த விலை மட்டுமல்லாது செலுத்தும் தொகைக்கு கவனத்திற் கொள்ள தக்கதான திருப்திகரமான பெறுமதியினை (value for money) எப்போதும் எதிர்பார்க்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். | சபையின் தேவைப்பாட்டிற்கு இணங்க விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டு அனைத்து விலைக்கேள்வியாளர்களின் விலைகோரல்களும் சமனான அடிப்படையில் நிறுவனத்திற்கு அனுகூலமற்ற நிலை எற்படாத வகையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | இரண்டு வருட காலம் தொடக்கம் தனியார் தேயிலை கொள்கலனில் கம்பனியிடமிருந்து | இருப்புக் குறைபாட்டுக்காக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா.534,604 தேயிலை கொள்கலன் நிறுவனத்திற்குச் | தாமதத்திற்கான காரணத்தை உடனடியாக விசாரணை செய்து |

| | | |
|---|---|---|
| பெறவேண்டிய இருப்பு குறைபாடு ரூபா.534,604 உம் மற்றும் சேதமடைந்த தேயிலைக் கொள்கலன் தொகைக்கான ரூபா.780,646 உம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய தொகையில் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சேதமடைந்த கொள்கலன்களின் பெறுமதியான ரூபா.780,646 தொகையினை அறவிட்டுக்கொள்ளும் நோக்கில் அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடல் செய்யப்பட்டு வருகின்றது. | இந்தத் தொகையினை வாடிக்கையாளரிடமிருந்து அல்லது பொறுப்பினைப் புறக்கணித்த சபையின் உத்தியோகத்தராயின் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பளை பிரதேச அலுவலகத்திற்குரிய உடுநுவர வலயத்தின் பதிவு எண் RT 189 இலக்கம் கொண்ட கழிவுத் தேயிலை தயார்படுத்தும் மத்திய நிலையத்திற்கு சபையினால் விநியோகிக்கப்பட்ட கழிவுத் தேயிலை அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள களஞ்சியசாலைக்கான அதிகூடிய தேயிலை 23,473 கிலோகிராம் ஆக இருந்த போதிலும் அதை விஞ்சி 38,864 கிலோகிராம் கழிவுத் தேயிலைத் தொகை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் இருப்புக் கணக்கெடுப்பில் அவதானிக்கப்பட்டது. இந்தத் தவறு தொடர்பில் கட்டணம் அறவிடப்பட்டு தவறினை நேர்ப்படுத்துவதற்கு கணக்காய்வுத் தினமான 2020 மே 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தேயிலைத் தொகையை இது வரையிலும் விடுவிக்கப்படாததுடன் தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தவறினை நேர்ப்படுத்தும் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தவறு நேர்ப்படுத்தல் கட்டணத்தை உடனடியாக அறவிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்வினால் மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட கழிவுத் தேயிலை தயார்படுத்தும் மத்திய நிலையங்களில் கறுப்புத் தேயிலை தரத்திற்கு அமைய இல்லாமை (Below Standard) இலங்கை தேயிலைச் சபையின் ஆய்வு கூடத்தின் நுண்ணுயிர்ப் பகுப்பாய்வு மூலம் அவதானிக்கப்பட்டது. உள்நாட்டுப் பயன்பாட்டிற்காக இந்த தயார்படுத்தப்பட்ட தேயிலை பயன்படுத்தப்படுகின்றது எனினும் சபையின் கவனம் இது தொடர்பில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பரீட்சிப்புச் சந்தர்ப்பங்களில் இந்த இடம் மூடப்பட்டிருந்ததால் பரீட்சிப்பிற்கு உட்படுத்த முடியாதிருந்ததாகத் தேயிலைப் பரீட்சிப்பாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்குப் பதிலாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2019 ஒக்டோபர் 20 ஆம் திகதி பரீட்சிக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு வெலம்பொடை பொலிஸ் நிலையத்தினூடாக கம்பளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. அதன் வழக்கு விசாரணை 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதி இடம் பெற்றிருந்ததுடன் தேயிலை ஆணையாளரின் TC/STI/2014-78 ஆம் இலக்கம் மற்றும் 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கு ஒருவருக்கு ரூபா.25,000 வீதம் தண்டப் பணம் அறவிடப்பட்டு மாசுபடுத்தலுக்கு உள்ளான தேயிலைத் தொகை 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதி நிலை மாற்றம் செய்வதற்கும் தரமான தேயிலைத் தொகையினை அவர்களுக்கு வழங்குவதற்கும் கட்டளை இடப்பட்டுள்ளது. | கழிவுத் தேயிலை மத்திய நிலையங்களில் காணப்படும் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற தேயிலைத் தொகை தொடர்பில் தேயிலைப் பரீட்சிப்பாளர்கள் மேற்பார்வையிடல் வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டில் பதப்படுத்தப்படாத தேயிலைக் கொழுந்திற்கு ரூபா.80 ஆகக் குறைந்த விலையினைப் பேணுவதற்காக கொழுந்து வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யும் பொருட்டு பண்டாரபொல தேயிலைத் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.3,489,773 பணத் தொகையானது தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் | 2015 ஆம் ஆண்டில் பதப்படுத்தப்படாத தேயிலைக் கொழுந்திற்கு ரூபா.80 ஆகக் குறைந்த விலையினை செலுத்தும் வேலைத்திட்டத்திற்கு அமைய MF 0370 பண்டாரபொல தேயிலைத் தொழிற்சாலைக்கு ரூபா.3,489,773.00 பணத் தொகையானது தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த துடன் அந்த தொகையினை செலுத்தாமையைக் | வழக்குத் தீர்ப்பிற்கு இணங்க அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி வரையிலும் அந்தத் தொகை மீளவும் அறவிடப்பட்டிருக்கவில்லை . | காரணமாகக் கொண்டு சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பை அடிப்படையாக எடுத்து இலங்கைப் பொலிசில் நிதி வஞ்சனை விசாரணை செய்யும் பிரிவின் ஊடாக உரிய பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு கம்பளை நீதிமன்றத்தில் B 564/2017 எனும் இலக்கத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஈ) | களுத்துறை பிரதேச அலுவலகம் நடாத்தப்பட்டு வரும் காணி 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 30 வருட காலத்திற்கு இலங்கை தேயிலைச் சபைக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு மேல் மாகாண அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாலிந்த நுவர பிரதேச செயலாளருடன் குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் இருந்தது. | பதுரலிய பிரதேச செயலாளருக்கு இந்த காணிக்காக வருடாந்தம் ரூபா.300,000 குத்தகைப் பணம் செலுத்துவதுடன் இறுதியாக 2019 ஆம் ஆண்டிற்காக 2019 ஜுலை 22 ஆம் திகதி குத்தகைப் பணம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த திகதியிட்டு கடிதமொன்று அனுப்பப்பட்டு இலங்கைத் தேயிலைச் சபையின் பெயரில் இந்த காணிக்கான குத்தகையை பெற்றுத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. | இரு தரப்பினரிடையே குத்தகை ஒப்பந்தத்திற்கு அணுகுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | சீனாவில் உள்ள தேயிலை மேம்பாட்டுப் பரிவிற்கு 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்குப் பதிலாக சீன அரசின் மூலம் சீன தூதுவராலய அலுவலகத்திற்கு மீள செலுத்தப்பட்ட ரூபா.889,870 (RMB 33 389.74) மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் சபைக்கு பெறப்பட்டிருக்கவில்லை. | சீன தேயிலை மேம்பாட்டு அலுவலகம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த வாகனத்திற்கு உரிய வட்வரி தொகையான RMB 33,389.74 பணத்தினை சீன தேயிலை மேம்பாட்டு அலுவலகத்தினால் வெளிநாட்டு உறவுகள் அமைச்சிற்கு மாற்றப்பட்டுள்ளது. அந்தத் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்காக பல நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் இந்தத் தொகையை இலங்கைத் தேயிலைச் சபைக்கு மாற்றப்படவில்லை. எவ்வாறாயினும் விரைவில் இந்த தொகையை வரவழைத்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | சபைக்கச் சொந்தமான மீள செலுத்தப்பட்ட பெறுமதி அடிப்படையில் வரித் தொகையை விரைவில் வரவழைத்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சபையினால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 211,115,401 செலவிடப்பட்டு கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த நுவரெலியா, பண்டாரவளை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி பிரதேசங்களில் அமைந்துள்ள 4 காணிகளின் உரிமம் சட்ட ரீதியாக சபைக்குப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்தக் காணிகள் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அந்தக் காணிகளின் உரிமத்தினைக் கையகப்படுத்துவதற்கு அல்லது குத்தகை உறுதி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரதேச செயலாளர்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கப்பட்ட போதிலும் காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஒரு சில தாமதங்களினால் அந்தச் செயற்பாடு பூர்த்தி செய்யப்படாது உள்ளது. எவ்வாறெனினும் காணிகளின் உரிமத்தினை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைக்குத் தொடர்ச்சியாக வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றேன். | காணி உரிமத்தினை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | சாத்திய வள ஆய்வின்றி ஆரம்பிக்கப்பட்ட ‘‘டீ மோமன்ட்ஸ்’’ எனும் பெயரிலான தேயிலை விற்பனை மத்திய நிலையமானது உற்பத்தித் திறனான முறையில் செயற்படாத காரணத்தால் ரூபா.62,603,006 நட்டம் ஏற்பட்டமை தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 06 ஆம் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் மூலம் கவனயீனமாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதனை மீறி பணிப்பாளர் சபையினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் பொருத்தமற்றது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மூலம் குதிரைப் பந்தய மைதானத்தில் தேயிலை விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் ஏற்பட்ட நட்டத்தினைத் தேயிலைச் சபை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவது பொருத்தமற்றது எனப் பணிப்பாளர் சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2012 ஆம் ஆண்டில் சிரியாவில் நடாத்துவதற்கு ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''புட்எக்ஸ்போ சிரியா'' கண்காட்சிக்கு வெளிநாட்டுத் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா.629,261 செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கண்காட்சி நடாத்துவது இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், இன்னமும் கணக்குகளில் முன் கொண்டு வரப்பட்டு காணப்படுகின்றது. | 2012 ஆம் ஆண்டில் சிரியாவில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "Foodexpo Siriya" கண்காட்சியானது அங்கு நிலவிய யுத்த நிலைமை காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இங்கு முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா.629,261 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் அதில் முன்னேற்றம் காணப்படவில்லை. இந்தக் காரணிகள் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு இந்த அறவிடமுடியாத முற்பணத் தொகையை நட்டமாகப் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு அல்லது முறையான அனுமதியுடன் ஏடுகளில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 920 பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் காணப்பட்ட போதிலும் அதில் 190 தொழிற்சாலைகள் தொழிற்படாது உள்ளன. அதற்கமைய பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளுடன் ஒப்பிடுகையில் தொழிற்படாத தொழிற்சாலைகள் 21 சதவீதமாக உள்ளதுடன் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியானது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வு ஆண்டு வரையிலும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தேயிலைத் தொழிற்சாலைகள் செயற்படாது காணப்படுவதுடன் ஒரு சில சந்தர்ப்பங்களில் தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளும் காரணத்தால் பதிவினை இடைநிறுத்தி உள்ளது. அவ்வாறே காலநிலை அல்லது வானிலை காரணங்களின் அடிப்படையில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. | சபையானது தேயிலை கைத்தொழிலில் ஒழுங்குறுத்தும் நிறுவனமாகத் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்கான சபையின் செயலநடவடிக்கைத் திட்டத்திற்கு அமைய அபிவிருத்திப் பணிகள் 04 வேலைத் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா.85,500,000 ஒதுக்கப்பட்டு இருந்ததுடன் உண்மையான செலவு ரூபா.71,746,234 ஆகும். இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| i. | 5 கட்டங்களின் கீழ் செலுத்தப்பட்ட தேயிலை மீண்டும் பயிரிடும் நிவாரணத் தொகையின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களுக்கு ரூபா.8,394,074 நிவாரணமாகப் பெற்றுக் கொண்ட 73.42 ஹெக்டெயர் தேயிலையை மீண்டும் பயிர்டுவதற்கு நடவடிக்கை எடுக்காததால் நிவாரணம் வழங்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை அடைய முடியாது இருந்ததுடன் அந்தத் தொகை மீளவும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | 05 கட்டங்களின் கீழ் செலுத்தப்பட்ட தேயிலை மீள் பயிரிடல் நிவாரணத் தொகையில் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களுக்காக ரூபா.8,394,074 தொகை 73.42 ஹெக்டெயருக்கு செலுத்தப்பட்ட போதிலும் அடுத்த நடவடிக்கைகள் தொடர்பான பரீட்சிப்பிற்காக குறித்த விண்ணப்பதாரிகள் தேயிலை சபையிடம் தெரிவித்திருக்காத காரணத்தால் அது தொடர்பில் பரிசீலனை செய்வதற்கு உத்தியோகத்தர்கள் செயற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளுகையில் குறித்த காணி உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொண்ட பணத்தினை உடனடியாக மீள செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் உடனடியாக பரீட்சிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு பயிர் செய்யப்படவில்லை எனின் பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேயிலையை மீள பயிரிடாத விவசாயிகளை பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கு அல்லது மீளவும் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டில் தேயிலை மீள் பயிரிடும் நிவாரணமாக ரூபா.25,560,830 செலுத்தப்பட்டு 172.7 ஹெக்டெயர் தேயிலை மீண்டும் பயிரிடப்பட்டுள்ளதாக சபையின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் உண்மையில் தேயிலை மீண்டும் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிரப் பரப்பு 51.6 ஹெக்டெயர் மட்டுமே என்பது கணக்காய்வினால் சேகரிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு இணங்க அவதானிக்கப்பட்டுள்ளது. | தேயிலை சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் தேயிலை மீண்டும் பயிரிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரத்தையும் பரீட்சித்ததன் பின்னர் கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ள 51.6 ஹெக்டெயர் நிரப் பரப்பு தொடர்பான காரணிகளைச் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும். | கணக்காய்வு அவதானிப்புகளக்கு ஒத்துக் கொள்ளக் கூடியதான வகையில் உடனடியாகப் பதில்களை வழங்குவதற்குப் போதுமானளவு தரவு முறைமையினை பேணுதல் வேண்டும். |
| iii. | தேயிலையை மீண்டும் பயிரிடும் நிவாரண முறையின் கீழ் முதல் 2 தவணைக்காக ரூபா.480,000 பிரதேச பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சபையினால் செலுத்தப்பட்டு இருந்த | தேயிலை மீண்டும் பயிரிடல் முறையின் கீழ் முதல் 02 கட்டங்களுக்காக 04 ஹெக்டெயருக்காக ரூபா.480,000 தொகையினை களனிவெலி பெருந்தோட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தப் | புதிய நிவாரணங்கள் வழங்குகையில் முன்னர் வழங்கப்பட்ட நிவாரணங்கள் எதிர்பார்க்கப்பட் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் தேயிலையை மீண்டும் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்தப் பணத்தினை அறவிடுவதற்குப் பதிலாக மீளவும் அதே தேயிலைக் காணிக்காகவே ''மொடல் டீ கார்டினிங்'' வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா.550,000 தொகையினைத் தேயிலையை மீண்டும் பயிரிடுவதற்காக வழங்கப்பட்டிருந்தது. | பகுதியில் ஒரு ஏக்கர் அளவில் 2019 ஆம் ஆண்டு முன்மாதிரி தேயிலை பயிரிடல் செயற்றிட்டத்தின் கீழ் நுவரெலியா பிரதேசத்தில் முன்மாதிரி பயிரிடலுக்கு மிகப் பொருத்தமான இந்த இடத்தினை அதே துறைக்கு நிலத்தினைத் தயாரித்தல் மற்றும் மண் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய காணியின் மிகுதி 3.5 ஹெக்டெயர் அளவினை மீண்டும் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு இந்த ஒரு ஏக்கர் பகுதிக்காக வழங்கப்பட்ட பணத்தினை அடுத்த நிவாரணங்களில் குறைத்துக் கௌ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ட செயல்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என்பதனைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். |
| iv | சபையினால் தேயிலைக் கொழுந்தின் தரத்தினை உயர்த்துவதற்காக மீளாய்வு ஆண்டில் அச்சு ஊடக வேலைத் திட்டத்திற்காக ரூபா.5,337,161 தொகையும் சிறந்த உற்பத்தி முறைமைக்காக ரூபா.2,236,559 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. வருடாந்தம் இதற்காக செலவிடப்பட்ட தொகை அதிகரித்துச் சென்றுள்ளதுடன் தேயிலைக் கொழுந்தின் தரத்தில் குறிப்படத்தக்களவு அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலவும் காலநிலை நிலைமையுடன் தேயிலைக் கொழுந்தின் தரத்தினை தற்போது காணப்படும் மட்டத்திலேயே பேணுவதற்கான ஆற்றல் கிடைத்துள்ளது. இலங்கை தேயிலை சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் தேயிலைக் கொழுந்தின் தரத்தினை உயர்த்துவதற்கான வேலைத் திட்டத்தின் காரணத்திலாகும். தற்காலத்தில் சிறந்த உற்பத்தி முறை உபாயத் திட்டத்தின் கீழ் (GMP) ''பலவீனமான'' எனும் தொகுதியில் தொழிற்சாலைத் துறை இல்லாததுடன் சாதாரண தொகுதியில் தொழிற்சாலைகள் மிகச் சொற்ப அளவிலேயே உள்ளன. விசேட தொகுதியில் மற்றும் நல்ல நிலையிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நிலையினைக் கைப்பற்றக் கூடியதாக உள்ளது சபையினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறந்த உற்பத்தி முறைமை வேலைத் திட்டங்களின் காரணத்தினாலாகும். | தேயிலைக் கொழுந்தின் தரத்தினை உயர்த்துவதற்கு மிகப் பொருத்தமான உபாய வழிகளுக்கு பணத்தினைச் செலவிட வேண்டும். |

(இ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான ஐந்து ஆண்டு காலப்பகுதியினுள் "இலங்கை தேயிலையை மேம்படுத்தும் நோக்கிலான உபாய வழிவகைத் திட்டம்" நடைமுறைப்படுத்துவதற்காக 2011 திசெம்பர் 01 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஏற்றுமதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வரிப் பணத்தில் எதிர்பார்க்கப்பட்ட உழைப்பில் ரூபா 8 மில்லியன் ஈடுபடுத்தி செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த இந்த வேலைத்திட்டம் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவதானிக்கப்பட்டன.

i. இந்த வேலைத் திட்டத்திற்கு உரிய உற்பத்தி மற்றும் படைப்பாற்றலுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு 2015 ஆம் ஆண்டு நவம்பர் 06 ஆம் திகதி தொடக்கம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் 05 ஆம் திகதி வரையிலுமான ஒரு வருட காலத்திற்கு ரூபா.328,423,200 (USD 2,260,000) இற்குத் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா.238,185,575 செலுத்தப்பட்டிருந்தது. ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டு இறுதியில் 04 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் குறித்த செயல்களை நிறைவு செய்ய முடியாதிருந்தது. அதனால் மேற்கூறிய ஒப்பந்தம் 03 சந்தர்ப்பங்களில் 2020 மே 05 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா.99,630,039 செலவில் 2016 எப்பிரல் மாதம் இந்த வேலைத் திட்டத்திற்கான

2015 ஆம் ஆண்டு நவம்பர் 06 ஆம் திகதி படைப்பாற்றலுள்ள உற்பத்திக்கு Phoenix O&M நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டதுடன் ஊடக கொள்வனவுக்கு ஆலோசனைச் சேவையைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது 2018 மார்ச் 21 ஆம் திகதியில் ஆகும். அதற்கமைய ரூபா.99,630,039 செலவில் உற்பத்தி செய்யப்பட்ட தொலைக்காட்சி விளம்பரத்தை ஊடகத்தில் ஒளிபரப்பு செய்வதற்குத் தாமதமாகியது. ஆயினும் ரஷ்யாவில் NTV நிறுவனத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட தேயிலை விளம்பர வேலைத் திட்ட தொடர்பில் மேற்குறிப்பிட்ட விளம்பரம் NTV ஊடகத்தின் ஊடாக ஒளிபரப்பப்பட்டது.

மேற்கூறிய தாமதத்தினைக் காரணமாகக் கொண்டு Phoenix O&M ஒப்பந்தம் 04 வருடங்களும் 06 மாதங்களும் நீடிக்கப்பட்டதுடன் அதன் அனைத்து படைப்பாற்றலுள்ள நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு

மேம்பாட்டு நடவடிக்கைகளில் மிக உற்பத்தித் திறனான பலனை பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்ட காலத்தினுள் உரிய நிகழ்ச்சித் திட்டங்களை ஒளிபரப்பு செய்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | தொலைக்காட்சி விளம்பரம் உருவாக்கப்பட்டு இறுதியில் மூன்று வருடங்கள் கடந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட வகையில் ஊடகங்களில் ஒளிபரப்பவதற்கு அறிக்கையிடும் தினம் வரையிலும் முடியாது போயிருந்தது. | இலங்கை தேயிலை சபைக்கு ஆற்றல் கிடைத்துள்ளது. இந்த ஒப்பந்தத்தை மேலும் நீடிக்காது 2020 மே மாதம் 05 ஆம் திகதி தொடக்கம் 03 மாத காலத்தினுள் இந்தச் செயல்கள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கு Phoenix O&M நிறுவனம் மற்றும் இலங்கை தேயிலை சபையுடன் உடன்பாடு செய்யப்பட்டிருந்தது. | |
| ii. | இந்த வேலைத் திட்டத்திற்கு உரியதான 2019 செப்டெம்பர் மாதம் ரஷ்யாவின் தனியார் நிறவனத்திற்கு ரூபா.29,832,302 செலுத்தி ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளில் ஊடாக மாநாடு நடாத்திய போதிலும் அதற்கு இணையாக மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | உலகலாவிய ரீதியிலான மேம்படுத்தல் வேலைத் திட்டமானது ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளில் ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபை 2019 ஆம் ஆண்டு அனுமதி வழங்கியிருந்தது. அதற்கமைய மக்கள் தொடர்பு விளம்பர நடவடிக்கையை முதலில் ஆரம்பிப்தற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளில் மக்கள் தொடர்பாடல் செயல்களைச் செய்வதற்கு உரிய விலை மனு நடைமுறைகள் மூலம் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 27 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தாலும் தெரிவு செய்யப்பட்ட முகவருக்கு அமைச்சரவை அனுமதி மற்றும் உரிய ஒப்பந்தத்திற்குத் தேவையான சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி என்பவற்றின் தாமதத்தினைக் காரணமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட முகவருடனான ஒப்பந்தம் செய்தல் தாமதமாகியது. ரஷ்யா மற்றும் உக்ரேனில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பொன்று மேலே தெரிவு செய்யப்பட்ட முகவரினால் பரிந்துரை செய்யப்பட்ட வேலைத் திட்டத்திற்கு அமைய செல்வதுடன் | வேலைத் திட்டத்தின் உற்பத்தித் திறனை மீளாய்வு செய்ததன் பின்னர் பணத்தினைச் செலவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்முதல் முறைமை ஊடாக உலகளாவிய மேம்பாட்டு வேலைத் திட்டத்தினை ஆரம்பித்தல் ரஷ்யாவில் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் உக்ரேனில் ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் திட்டமிடப்பட்டிருந்த தேநீர் சுவை பார்த்தல் வேலைத் திட்டம் தொடர்பிலும் விற்பனை நிலையங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதியின் பின்னர் புதிய நிர்வாக அதிகாரசபை மூலம் இந்த வேலைத் திட்டம் மீண்டும் மீளாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக முன்மொழியப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு 2020 ஜனவரி மாதம் 3 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபை அதற்காக விளம்பர மற்றும் விற்பனைக் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| iii. | இந்த வேலைத் திட்டதிற்கு உரியதான ஊடகக் கணிப்பாய்வு ஊடக திட்டம் தயாரித்தல் மற்றும் ஊடகக் கொள்வனவு உயர்ந்த மட்டம் மற்றும் தாழ்ந்த (Above the line & Below the line) ஆகிய செயல்கள் தொடர்பில் 2018.03.21 ஆம் திகதி தொடக்கம் 2020.03.20 திகதி வரை ஆலேசனைச் சேவை வழங்குவதற்காகக் கொழும்புப் பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா.219,899,960 இற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய எதிர்பார்க்கப்பட்ட 12 நாடுகளுக்கு ஊடக | 2018 மார்ச் மாதம் 21 ஆம் திகதி ஊடகக் கொள்வனவுக்கான ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு Dentsn Grant நிறுவனத்துடன் 3 வருடங்களுக்கு ஒப்பந்தத்திற்கு உடன்பட்டதுடன் Dentsn Grant நிறுவனம் ஊடகக் கணிப்பாய்வை 12 நாடுகளுக்கு நிறைவு செய்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டளவில் 07 நாடுகளுக்கான ஊடகத் திட்டத்தினைத் தயாரித்திருந்தது. ஆயினும் 2019 ஆம் ஆண்டில் உலகளாவிய மேம்பாட்டு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது ரஷ்யா மற்றும் உக்ரேனில் மட்டுமே ஆகும். அதற்கமைய அந்த | மிகவும் கூடிய உற்பத்தித் திறனான பலனைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் திட்டமிடப்பட்ட காலத்தினுள் திட்டமிடப்பட்ட செயல்களை நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தினைத் தயாரித்தல் 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் எனினும் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளுக்கு மட்டும் ஊடக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஊடகக் கணிப்பு மற்றும் ஊடகத் திட்டம் தயாரித்தல் என்பவற்றுக்கான வரவு செலவு தொகையினை விஞ்சி ரூபா.5,749,828 செலவிடப்பட்டிருந்தது. | ஊடக திட்டதிற்கான உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | |
| iv. | இந்த வேலைத் திட்டத்தில் படைப்பாற்றலுள்ள நடவடிக்கை மற்றும் ஊடக நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தை மேற்கூறிய 2 தனியார் நிறுவனங்களிடம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வேலைத் திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சபையின் மேம்பாட்டுப் பிரிவிற்கு மேலதிகமாக மூன்று உத்தியோகத்தர்களைக் கொண்ட விற்பனைச் சபை ஒன்று ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டில் அதற்காக ரூபா.5,128,926 செலவிடப்பட்டு இருந்ததுடன் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயல்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு முடியாது இருந்தது. | இலங்கை தேயிலையை மேம்படுத்தும் உபாய வழிவகைத் திட்டத்திற்கு அமைய உலகளாவிய மேம்பாட்டு வேலைத் திட்ட நடவடிக்கைக்காக Marketing Cell என்று முன்மொழியப்பட்டிருந்தது. அதற்கமைய 06 உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது 04 உத்தியோகத்தர்களக்கு மட்டுமே ஆகும். அதற்கமைய அந்தப் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு இரு தடவைகள் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட போதிலும் உரிய சம்பளம் மற்றும் தகைமைகளுக்கிடையே உள்ள சந்தை வேறுபாட்டின் அடிப்படையில் அந்த அந்த வெற்றிடத்தை நிரப்ப முடியாதுள்ளது. அதற்கமைய ஒப்பந்த அடிப்படையின் கீழ் உரிய அறிவு உள்ள மூன்று உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறே உபாய வழிவகைத் | விசேடமான செயற்பாட்டிற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் குறித்த செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திட்டத்திற்கு அமைய இந்த உலகளாவிய மேம்பாட்டு செயற்பாடுகளை தற்போது சேவையில் உள்ள உண்மையான மேம்பாட்டுப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு செய்வதற்கான சிரமங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய உலகளாவிய மேம்பாடானது விசேடமான பதவியணியினரால் மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| v. | 2011 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலைக்கான உலகளாவிய தேயிலைச் சந்தைப் பங்குகள் 18 சதவீதத்தில் காணப்பட்டபோது உற்பத்தித் திறனான மேம்பாட்டு வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஐந்து ஆண்டு உபாய வழிவகை வேலைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தது. அவ்வாறிருக்க ஐந்து ஆண்டு கால எல்லையைக் கடந்து இரண்டு ஆண்டுகளும் முடிவுற்ற நிலையில் இந்தத் திட்டத்தை வினைத் திறனுள்ளதாக நிறைவேற்ற முடியாதிருந்துள்ளது. சபையினால் வருடாந்தம் செலவிடப்படும் மேம்பாட்டுச் செலவுகள் அதிகரித்துள்ள போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் உலகளாவிய தேயிலைச் சந்தையில் இலங்கை பங்குகள் 15 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச தேயிலைக் குழுவின் புள்ளிவிபரவியல் தரவுகளுக்கு அமைய அவதானிக்கப்பட்டது. | உலகளாவிய சந்தையில் இலங்கைத் தேயிலைக்கான பங்குகள் 18 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதைக் கருத்திற் கொள்ளுகையில் அதற்கு ஒப்பீட்டளவில் உலகளாவிய தேயிலை உற்பத்தியும் மேற்கூறிய வகையில் இலங்கை தேயிலையின் உற்பத்திப் பங்கு 2011 ஆம் ஆண்டில் 7 சதவீதமாகக் காணப்பட்டதுடன் மீளாய்வு ஆண்டில் இது 5 சதவீதம் வரையிலும் வீழ்ச்சியடைந்துள்ளது.<br><br>2011 ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை உற்பத்தி 327 மில்லியனாக இருந்ததுடன் அதே ஆண்டில் 322 மில்லியன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே மீளாய்வு ஆண்டைக் கருத்திற் கொள்ளுகையில் சிலோன் தேயிலை உற்பத்தி 300 மில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் சிலோன் தேயிலை ஏற்றுமதி 292 மில்லியனாக அறிக்கையிடப்பட்டிருந்தது. குறித்த வருடங்களைக் கவனத்திற் கொள்ளுகையில் ஏற்றுமதித் தொகையானது உற்பத்தித் தொகையின் 98 சதவீதமான பெறுமதியாகக் காணப்பட்டது. உலக சந்தையில் இலங்கையின் சதவீதம் குறைவதற்கான காரணமாக ஆபிரிக்க வலயத்தில் தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகரித்துள்ளமையால் சதவீத ரீதியில் ஆபிரிக்க வலயப் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளமை காணப்படுகின்றது. | இருக்கின்ற நுகர்வோரைத் தக்க வைத்துக் கொள்ளல் மற்றும் புதிய நுகர்வோரைக் கவருவதற்காக மேம்பாட்டு உபாய வழிவகைகளைத் திட்டமிடப்பட்ட காலத்தினுள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான இரண்டு மோட்டார் வாகனங்கள் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தமையால் மீளாய்வு ஆண்டில் சபையின் போக்குவரத்து தேவைப்பாட்டினை நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட தனியார் வாடகை வாகனத்திற்காக ரூபா.3,013,106 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் ரூபா.898,250 செலவில் இந்த வாகனத்தைத் திருத்தி மிகச் சிறந்த நிலையில் செலுத்துவதற்கு ஈடுபடுத்தியுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதனால் அந்த வாகனம் பொருளாதாரமற்றது என்பதாக ஆய்வுக் குழுவினால் செய்யப்பட்டிருந்த பரிந்துரை கருத்து வேறுபாடான காரணி என்பதும் மேலதிகமாக அவதானிக்கப்பட்டது. | சபைக்குச் சொந்தமான 02 டபள் கப் வானங்களை மேலும் திருத்தம் செய்து பயன்படுத்துதல் பொருளாதாரமற்ற செயற்பாடு எனத் தீர்மானித்த பணிப்பாளர் சபை 2016 ஆம் ஆண்டில் இந்த 02 டபிள் கப் வாகனங்களையும் விலக்குவதற்குத் தீர்மானித்து அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கையில் அந்த 02 டபிள் கப் வாகனங்களை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பாவனைக்காக பெற்றுத் தருமாறு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரினால் எமக்கு அறிவுரை வழங்கப்பட்டது.<br><br>அதற்கமைய அந்த வாகனங்களை பாவனைக்காக வழங்குதல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் இரு நிறுவனங்களினாலும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயலாளரின் அறிவுரையின் அடிப்படையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றேன்.<br><br>மீளாய்வாண்டில் போக்குவரத்துத் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக அந்த 02 டபள் கப் வாகனங்கள் எந்த வகையிலும் பயன்படுத்த முடியாது இருந்ததுடன் தனியார் வாடகை வாகனங்களைப் பயன்படுத்தியது அந்த 02 டபள் கப் வாகனங்களை பயன்படுத்த முடியாததாலன்றி தேயிலைச் சபையின் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ பயணங்களுக்குப் போதியளவில் பாவனைக்குரிய நிலையில் வாகனங்கள் இல்லாமை என்பதனாலும் அதற்கமைய தேவையான வேறு வாகனங்களை வாடகைக்கு எடுப்பதற்காகும். | சபைக்குச் சொந்தமான வளங்களை வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படல் ஆகாது. |

## 3.6 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் பதப்படுத்தப்படாத தேயிலைக் கொழுந்திற்கு ரூபா.80 ஆன குறைந்த விலையைப் பேணுவதற்காகத் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு செலுத்தும் நோக்கில் சபைக்கு திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த ரூபா.6,738,000,000 நிவாரணத் தொகையில் மிகுதி ரூபா.912,229 தொகை 2015 திசெம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் திறைசேரிக்கு மாற்றப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பொது திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த ரூபா.6,738,000,000 நிவாரணத் தொகையில் மிகுதி ரூபா.912,229 தொகையானது தேயிலைச் சபைக் கணக்கில் இன்னமும் காணப்படுகின்றது. இந்தத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பல்வேறு முறைப்பாடுகள் மற்றும் சிக்கல்கள் காரணமாக இது வரையிலும் கொடுப்பனவு செய்து நிறைவு செய்ய முடியாதிருந்த கிறீன் ஹில்டொப் MF1399 மற்றும் குருகொடல்ல MF1196 என்பவற்றின் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு செலுத்துவதற்கு ஆகும். | பரீட்சித்தல் நடவடிக்கையை விரைவுபடுத்தி கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகையைச் செலுத்தி மிகுதிப் பணத்தைத் திறைசேரிக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 கொள்முதல் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேயிலையில் காணப்படும் கிருமிநாசினி எச்சங்களைப் பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வு கூடத்தில் அமைக்கப்பட்டிருந்த GCMS/MS இயந்திரம் செயலற்று காணப்படுகின்றமையால் புதிய இயந்திரமொன்றை நிறுவுவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா.50,000,000 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கொள்முதல் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆய்வு கூட வருமானம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 44 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | இந்த உருப்படியினைக் கொள்வனவு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட வரவு செலவு ஆவணத்தில் ஒதுக்கீட்டினை உட்சேர்த்து 2019 ஜுன் 19 ஆம் திகதி தொழில்நுட்ப மதீப்பீட்டுக் குழுவொன்றை நியமித்து விபரக் குறிப்பினைத் தயாரித்துத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்கமைய 2019 ஒக்டோபர் 16 ஆம் திகதி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டு விலைமனு கோரப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த 3 விலை மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த விபரக் குறிப்புகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த விபரக் குறிப்புடன் இணங்காததால் 2019 திசெம்பர் 02 ஆம் திகதி குறித்த உருப்படிக்காக மீண்டும் விலை மனு கோருவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், 2020 ஆம் ஆண்டில் வரவு செலவு ஆவணங்களில் அதனை உட்படுத்தி கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. | சபையின் செயற்பாட்டு செயல்முறைகளுக்குத் தேவையான கொள்முதல்கள் நடப்புக் காலத்தில் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் உள்ளக இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையினை ஒழுங்கான முறையில் பேணுவதற்காக ரூபா.3,000,000 பெறுமதியான கணிணி மயப்படுத்தப்பட்ட இன்வென்ட்ரி கட்டுப்பாட்டு முறைமையினை உருவாக்குவதற்கு 2019 மே 10 ஆம் திகதி கொழும்பு பிரதேசத்தில் தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 19 வார காலத்தினுள் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனினும் கணக்காய்வுத் தினமான 2020 மே 30 ஆம் திகதி வரையிலும் அந்த செயல் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் 2019 மே மாத நடுப்பகுதியளவில் இருப்புக் கட்டுப்பாட்டு மென்பொருள் முறைமை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டது. தேவையான தரவுகள் உள்ளீடு செய்வதனால் பதவியணியினர் பயிற்சியளித்தல், தகவல் வழங்கல் போன்ற காரணங்களுக்கு 08 மாத காலம் கடந்தது. அதன் பின்னர் 2020 பெப்ரவரி மாதமளவில் அந்த இருப்புக் கட்டுபாட்டு முறையினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கையில் மார்ச் மாதம் ஏற்பட்ட கொவிட் 19 அபாயம் காரணமாக அந்த நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆயினும் 2020 ஜூலை 31 ஆம் திகதியளவில் இந்த இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றது. | உள்ளக இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையினை ஒழுங்காகப் பேணுவதற்கு மென்பொருள் ஒழுங்கு முறைமையை விரைவில் நிறுவுதல் வேண்டும். |
| (இ) | 2016 ஒக்டோபர் 18 ஆம் திகதி அமைச்சரவையினால் தேயிலைத் கைத்தொழிலுக்காக தகவல் தொழில்நுட்ப ஒழுங்கு முறைமையினைத் தயாரிப்பதற்கு அனுமதியை வழங்கி இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் இதற்காக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா.260,200,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் குறித்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் ஆலோசனைச் சேவைக்காக ரூபா.885,000 செலவிடப்பட்டிருந்தது. | தேயிலைக் கைத்தொழிலுக்கான தகவல் தொழில்நுட்ப ஒழுங்கு முறைமையினைத் தயாரிக்க உரிய தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையை 2019 ஜூன் 07 ஆம் திகதி அமைச்சின் கொள்முதல் குழுவிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவினால் தீர்மானமொன்றைப் பெற்றுத் தர தாமதமானதுடன் 2020 ஜூன் 06 ஆம் திகதி கொள்முதல் தீர்மானம் தொடர்பில் எதிர்ப்பினைத் தெரிவிக்க உரிய விலை மனுதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | கொள்முதல் நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 3.8 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைக்கான பணிப்பாளர் (தேயிலை மேம்படுத்தல்) பதவிகள் இரண்டும் உதவிப் பணிப்பாளர் | இந்தப் பதவியைப் புதிதாக உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தமையும், அதற்கமைய பதவி | சபையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பதவியணிக்கான |

| | | |
|---|---|---|
| (மேம்படுத்தல்) பதவிகள் ஆறும் விற்பனை மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிகள் நான்கும் காணப்படுவதுடன் விற்பனை மேம்பாட்டுச் செயற்பாடுகள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விற்பனை) எனும் புதிய பதவிக்கு நிறுவனத் தேவைப்பாட்டினை அறிந்து கொள்ளாது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த பதவிக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைமையினைத் தயாரித்துப் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையினால் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விற்பனை) பதவியை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதனால் அந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தப் பதவியை ஏற்படுத்துவதற்கான தேவைப்பாட்டினை அறிந்து கொண்டிருந்தது அமைச்சரவைக் குழுவினால் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | அனுமதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை வேண்டும். |

### 3.9 வரவு செலவு

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வியாபாரக் குறி மேம்படுத்தல் வேலைத் திட்டத்திற்கு ரூபா.500,000,000 உம் மற்றும் தூதுவராலய அலுவலகங்களுடன் நடாத்தப்படும் 20 வேலைத் திட்டங்களின் மேம்பாட்டு செயல்களுக்காக ரூபா.30,000,000 உம் என நிதி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த போதிலும் வியாபாரக் குறி மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எவ்விதமான நிதித் தேவைப்படுகளும் 2019 ஆம் ஆண்டில் இருக்காததுடன் தூதுவராலய அலுவலகத்துடன் நடாத்தப்பட்ட 05 வேலைத் திட்டங்களுக்கு மட்டும் ரூபா.997,377 அளவில் செலவிடப்பட்டிருந்தது. அதனால் தேவைப்பாட்டினை அறிந்து கொள்ளாது பாதீட்டு ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2018/2019 ஆம் ஆண்டில் வியாபரக் குறி மேம்பாட்டு முறைமைக்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய இலங்கைத் தேயிலை சபை மற்றும் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு இடையிலான உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்டது 2019 ஆம் ஆண்டின் முதற் பாதியில் இருந்தே ஆகும். அதனால் முதலில் உடன்படிக்கை செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களினது உடன்படிக்கை நிறைவு பெறுவது 2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் என்பதோடு நிதி ஒதுக்கம் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டது 2020 ஆம் ஆண்டில் ஆகும். அதனால் ஒதுக்கப்பட்ட நிதி வளங்கள் பாவனை செய்யப்படவில்லை எனினும் 2019 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவு அமைச்சிற்கு 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வழங்கப்படுவதனால் அதில் இந்த குறைபாட்டினை அறிந்து கொள்வது கடினமாகும். | திருத்தப்பட்ட வரவு செலவு தயாரிக்கையில் பின்னர் அறிந்து கொள்ளப்பட்ட மாறுதல்களை உள்ளடக்குதல் வேண்டும். |